> தப்பு அல்லது பாவம் செய்யாமல் இருப்பது புனிதமாகாது... ஆனால் பழைய நிலையை விடுவதற்கும் மீண்டும் தொடங்குவதற்கான தயார்நிலைக்கும் அதற்கும் மேலாக மன்னிப்புக்கும் மனமாற்றத்திற்குமான நிலையை வளரச் செய்வதே புனிதமாகும்.
>
> - திருத்தந்தை 16ம் பெனடிக்

உயிர்த்தக் கிறிஸ்து சீடர்களுக்குத் தோன்றுவது குறித்து இந்த ஞாயிறு நற்செய்தி பேசுகிறது. இயேசு, தமது சீடர்களுக்கு எவ்வாறு தோன்றினார், அவர்கள் அதற்கு எவ்வாறு செயல்பட்டனர் என்பதை ஆழமாக பார்ப்போம். முதலில், அவர்கள் நடுவில் நின்று, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" எனக்கூறினார். பேயைக் கண்டது போல் சீடர்கள் பயந்து நடுங்கினர். அடுத்து, இயேசு அவர்களுக்கு தைரியம் சொல்லி, தமது கைகளையும் கால்களையும் பார்க்கும்படி கூறினார். தொட்டுப் பார்க்கும்படியும் அவர்களைக் கேட்டுக் கொண்டார். தமது கைகளையும் கால்களையும் காட்டினார். அவர்கள் மகிழ்ச்சி கொண்டாலும், அவர்கள் மனதில் அவநம்பிக்கையும் சந்தேகமும் படர்ந்திருந்தது.

அவர்களுக்கு இன்னும் நம்பிக்கை ஏற்படவில்லை என்பதை உணர்ந்த இயேசு, அவர்களிடம் சாப்பிடுவதற்கு ஏதாவது இருக்கிறதா எனக் கேட்டார். அவர்கள் கொடுத்த மீன் துண்டுகளைச் சாப்பிட்டார். அவர்களோடு இருந்த போது அவர் கற்பித்தவற்றை இயேசு நினைவுப்படுத்தினார். இதனால், மறைநூலை புரிந்து கொள்வதற்கு அவர்களின் மனதைத் திறந்தார். மெசியா பாடுபட வேண்டும், மூன்றாம் நாள் சாவிலிருந்து உயிர்ப்பெறுவதைக் கற்பித்தார். எல்லா நாடுகளுக்கும் அவரது பெயரால் மனமாற்றத்ததையும் மன்னிப்பையும் போதிக்கச் சொன்னார். இதற்கு நீங்களே சாட்சி என இயேசு கூறினார்.

நடப்பதை முன்பே போதித்திருந்தாலும், அடையாளம் காண்பதற்கும் உயிர்த்து விட்டதை ஒப்புக் கொள்ளவும் தடுமாறிய தமது சீடர்களுக்கு பொறுமையோடும் கனிவோடும் தம்மை வெளிபடுத்துகிறார் இயேசு. அவர்களைக் கடிந்து கொள்ளாமல், அவர்கள் அவரை அடையாளம் காண்பதற்கு உதவியாக, தமது பணி, மரணம், உயிர்ப்பு பற்றி எடுத்துக் கூறுகிறார். தூயவரான இயேசுவை கடவுள் அனுப்பியதை உலகம் அறிந்து கொள்ளத் தவறி விட்டது என முதல் வாசகத்தில் புனித பேதுரு கூறுகிறார். அவரது கட்டளையைக் கடைப்பிடித்தால் கடவுளை அறிய முடியும் என கிறிஸ்துவர்களுக்கு புனித யோவான் நினைவுறுத்துகிறார். கிறிஸ்து தொடர்ந்து நமக்கு தம்மை வெளிப்படுத்தி வருகிறார். இன்றும், பல்வேறு வழிகளில் நம்மோடு அமைதியாகவும் பொறுமையாகவும் பேசுகிறார். நாம் அவரது குரலைக் கேட்கிறோமா, **அவரது பிரசன்னத்தை நம்மிடையே உணருகிறோமா என்பதே பெரும் கேள்வி?** ✝

**வாரம் ஒரு வசனம்**

அவரது பிரசன்னத்தை நம்மிடையே உணருகிறோமா என்பதே பெரும் கேள்வி?

INTERNAL CIRCULATION ONLY
BUL 15/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

15 ஏப்ரல் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலம் 3ம் ஞாயிறு

## எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்




# அவரை அடையாளம் காண

**மினவுதல் மாதா தேவாலயம்**
85A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரு கூய்

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*
***எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்***
*2018 ஏப்பிரல் (சித்திரை) மாதத்தின் கருப்பொருள்:*
***கிறிஸ்துவில் மீட்கப்பட்டோம்***

# மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம் ( 1848 – 2018 )

**பங்கு அலுவலக நேரம்:**
**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



## இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பாஸ்கா 3ஆம் ஞாயிறு சனி 14-04-2018 ஞாயிறு 22-04-2018

**தி.ப 3: 13-15, 17-19 தி.பா 4: 2-4, 6b -7, 9 1 யோவான் 2: 1-5a லூக்கா 24: 35-48**

**உமது முகத்தின் ஒளி எம்மீது வீசச் செய்யும் ஆண்டவரே. (தி. பா 4)**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 14 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (இளைஞர்கள்) | |
| ஞாயிறு | 15 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00ம | திருப்பலி (த) (புனித இரேனியுஸ்)<br>திருப்பலி (ஆ) (புனித பிரான்சிஸ்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தே.மொ) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் )<br>**மதியம் 2 மணிக்கு குடியேற்றவாசிகளின் ஈஸ்டர் ஒன்றுகூடல் - ஆலய மண்டபம்** |
| திங்கள் | 16 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 17 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 18 | கா திருப்பலி நடைபெறாது | | *குருக்களின் மாதாந்திர தியானம் APC கோலாலும்பூர்* |
| வியா | 19 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 20 | 6.45 கா | திருப்பலி | *மா 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம் - காடோங்* |

## பாஸ்கா 4ஆம் ஞாயிறு

**தி.ப 4: 8-12 தி.பா 117: 1, 8-9, 21-23, 26, 28-29 1 யோவான் 3: 1-2 யோவான் 10: 11-18**

**கட்டுவோர் புறக்கணித்த கல்லே மூலைக்கல் ஆயிற்று ! (தி. பா 117)**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 21 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. மைக்கேல்) | **மாலை 7.00 மணிக்கு<br>குழந்தைகளுக்கான திருமுழுக்கு** |
| ஞாயிறு | 22 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00ம | திருப்பலி (த) (புனித இரேனியுஸ்)<br>திருப்பலி (ஆ) (புனித ஜோன் பொஸ்கோ)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தே.மொ)<br>மாலை 6.30 கம்.செபீர் (தே.மொ) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

இன்று திருப்பலியை சிறப்பாக வழி நடத்த உதவியவர்களுக்கும் மற்றும் திருவழிபாட்டு குழுவினருக்கு நம்முடைய மனமார்ந்த நன்றிகள்

**2018 ஏப்பிரல் (சித்திரை) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

**1) பங்கு காணிக்கை:**
i) **07/08 ஏப்பிரல்** : ரி.ம 10,561.00 **தித்தி:** ரி.ம 121.00
ii) **சமூக அக்கறைப் பணிக்குழு** : ரி.ம 6,377.00

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**2) திருப்பலிக்கு முறையான ஆடையை அணிந்து வாருங்கள் -** அனைத்து பங்கு மக்கள், பணி செய்யும் பணிக்குழுவினர், பொறுப்பாளர்கள் அனைவரும் நற்கருணை கொண்டாட்டத்திற்கு ஏற்ற வகையில் உடை அணிந்து வருவதை நினைவில் கொள்ளுங்கள்.

**மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்.**
அ) எமிலி லோ லை மெங் (இறப்பு: 09/04/2018)
ஆ) மரியா லீ லெயான்(இறப்பு: 10/04/2018)
***(முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக!***

➢ **பங்கின் தொழில் நுட்பக் குழுவில் ஒளி / ஒலி பொறியாளர்களாக உதவி செய்திட அழைக்கிறோம்.** பங்கு அலுவலகம் அல்லது பங்குத் தந்தை அருள்திரு.ஜோர்ஜ் அவர்களை தொடர்புகொள்ளவும். இதுவரை தங்களது உதவியையும் ஆதரவையும் தந்த நேடன் மற்றும் அவர் தம் குழுவினருக்கு நம்முடைய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

➢ **சிரம்பான் வெஸ்லி மெத்தோடிஸ் பள்ளி கார்னிவெல்** அவர்களுடைய நிதிதிரட்ட நம்முடைய ஆதரவை நாடுகிறார்கள். (நிதி/உணவு விற்பனை, விளையாட்டு மேடை, இவற்றுக்காக டிக்கெட்டுகளை வாங்கவோ அல்லது உணவு விற்பனை செய்ய) ஆர்வம் உள்ளோர் தொடர்புக்கு பத்துமா 014-965 1108

➢ **ஆலயத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்திருக்க உதவுங்கள்:** சுவர்களில் ஆணி அடிப்பது, பசை விளம்பரங்கள் ஒட்டுவது ஆகியவை அனுமதிக்கப்படாது. இறைவன் வாழும் இல்லமாகிய ஆலயத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டியது நம் அனைவரின் கடமை,

➢ **வகுப்பறைகளில் உள்ள மேசை, நாற்காலிகளை அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டாம்.** அவை ஒழுங்காக பராமரிககப்பட்டு முறையாகப் பயன்படுத்துவதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

➢ **WOW தண்ணரில் நடை** - 48 மணி நேர நிகழ்ச்சி - ஏப்ரல் 27-(வெள்ளி) காலை 9.00 - 28 (சனி) காலை 9.00 வரை (மத்தேயு 14:28)

**பேதுரு:** "ஆண்டவரே, நீர் தாம் என்றால், நானும் கடல் மீது நடந்து உம்மிடம் வர ஆணையிடும்"
**இயேசு:** "வா" என்றார்.

பேதுருவைப் போல துணிவோடும் விசுவாசத்தோடும் அவரின் சீடர்களாக இயேசுவின் சமூகத்தினர் அனைவரையும் நாடிச் சென்றிடுவோம். ஏனென்றால், இயேசுவே "வா" என்று கட்டளையிடுகிறார்.
27 ஏப்ரல் இரவு 8.00 மணி - வீதியில் இருப்போருக்கு உணவளித்தல்
28 ஏப்ரல் காலை 9.00 மணி - வீட்டில் இருக்கும் நோயாளிகளைச் சந்தித்தல்
பகல் 1.00 மணி - ஏழை குடும்பங்களைச் சந்தித்து மகிழ்ச்சி பைகளை அளித்தல்
மகிழ்ச்சிப் பைகளை நிரப்பிடவும், சூப் கிச்சனுக்கும் நிதி உதவி தேவைப்படுகிறது. சூப் கிச்சன் மற்றும் நோயாளிகளைச் சந்திக்கவும் / மேலும் புகைப்படம் /ஒளிப்படம் எடுக்கவும் சமூக வலைத்தளத்தில் பகிரவும் தன்னார்வலர்கள் தேவைப்படுகின்றனர்.
தொடர்புக்கு: எட்வின் மூ (012-2059809) கிளென்: 010 2727169

**170 ஆம் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்தில் எமது மினவுதல் தேவாலயம்**

➢ **பங்கு தூதுரைப் பணிக்காக வருகை தரவிருக்கும் இரட்சகர் சபைக் குருக்களை வரவேற்போம்.** அருள்தந்தையர்கள்: பேட்ரிக் மாசாங் (கோலாலம்பூர்), பிரான்சிஸ் விஜயன், யூஜின் லீ (சிங்கப்பூர்) ஜோசப் அப்ரஹாம் மற்றும் ஜோன் போல் (இந்தியா) (ஏப்ரல் 16 முதல் மே 25 வரை) இங்கு தங்கியிருந்து தூதுரைப் பணி செய்ய இருக்கும் அவர்களுக்காக நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம்.

➢ **தூதுரைப் பணி மாதம்** (பங்கு /அதிச அளவில்) இரட்சகர் சபை குருக்களால் நடத்தப்படும் (ஏப்ரல் 16 - மே 20 வரை)

அ) 16 ஏப்ரல் (திங்கள்) அதிச புனித சிசிலியா (லாபு) & புனித அல்பர்ட் (டெம்ப்ளர்)
ஆ) 17 ஏப்ரல் (செவ்) அதிச புனித டானியேல் (லாபு) & புனித அம்புரோஸ் (சிக்காமட்)
இ) 18 ஏப்ரல் (புதன்) அதிச புனித ஹிலாரி 2 (சிக்காமட்) & புனித அலோசியஸ் (லாபு)
ஈ) 19 ஏப்ரல் ( வியா) அதிச புனித பேசில் (சோன் 3) & சிகாமட் கேம்ப் (சிகாமட்)
உ) 20 ஏப்ரல் (வெள்ளி) அதிச புனித மார்கிரெட் ( டெம்ப்ளர்)
ஊ) 23 ஏப்ரல்(திங்கள்): அதிசக்கள்: புனித மரியா(பெர்மாய்), புனித அந்தோணி (டெம்ப்ளர்), புனித டெனிஸ் (லாபு), புனித பேட்ரிக் (திமியாங்), புனித குபெர்டினோ யோசேப்பு (சிக்காமட்)

**கூடுதல் விவரங்களுக்கு உங்களுடயை அதிச/சோன் பொறுப்பாளர்களை தொடர்பு கொள்ளவும்.**

➢ **மே மாதம் - செபமாலை மாதம் -** அனைவரின் இல்லத்தில் அதிசக்களில் மற்றும் அதிச க்களில் நடைபெறும் திருப்பலிகளின் போதும் செபமாலை செபிப்போம்.

➢ **மினவுதல் மாதா திருவிழா - 170 ஆம் ஆண்டு கொண்டாட்டம்: நவநாள்: மே 23 - மே 31 வரை**

➢ **தவக்கால உறைகள்:** உங்களுடைய தவக்கால காணிக்கைகளை பங்கு அலுவலகத்தில் அல்லது திருப்பலி நேர உண்டியலில் போடலாம்.

➢ **உதவும் கரங்கள்:** ஏப்ரல் 2018 முதல் நம் பங்கில் இலவசமாக கூடுதல் வகுப்புகள் தொடங்க உள்ளன. பாடங்கள்: வரலாறு, (படிவம் 5) கணக்கு (படிவம் 3) இதில் அதிகமான மாணவர்கள் சேர்ந்து பயின்று பயன்பெற அழைக்கிறோம். தொடர்புக்கு: பிரான்சிஸ் ஜேசு (012-2964 336) அல்லது ஹிலரி ஸ்டாமரியா (019-654 7347)

➢ **தேர்தல் மீண்டும் வந்துவிட்டது**: சிறந்த மலேசியாவை உருவாக்க 14 ஆம் பொதுத்தேர்தலுக்காக செபிப்போம்.தேர்தல் நாள்: 09-05-2018(புதன்) வாக்காளர்களாக ஏற்கெனவே பதிந்துகொண்டிருந்தால், உங்களுடைய வாக்களிக்கும் மையங்கள் எங்குள்ளது என்று தெரிந்துகொள்ள இந்த அகப்பகத்தை நாடுங்கள். https:pengundi.spr.gov.org வாக்கு மையங்களில் உதவி செய்யவும், வாக்குகளை எண்ணுவதற்கும் நபர்கள் தேவைபப்படுகின்றார்கள். விருப்பம் உள்ளோர் திரு. ஷாஃபிக் (018-2801028 / 018-777 2425) அல்லது ஸ்டீவன் (012-6823 777) தொடர்புகொள்ளவும்.

➢ **விவிலிய உருவாக்கப் பயிற்சி: - மாற்கு நற்செய்தி விளக்கம்:**மறைதிரு அந்தோணி மதலைமுத்து(இந்தியா) அவர்கள் வழங்குகிறார். மாமறை மாவட்ட ஏற்பாட்டில் நடைபெறும் இதில் வந்து கலந்து பயன்பெற அழைக்கிறோம். நாள்:21-04-2018 இடம்: மினவுதல் மாதா தேவாலய மண்டபம். நேரம்:காலை 9.00 - 4.00 வரை, கட்டணம்: ரிம:20.00 தொடர்புக்கு: விவிலியப் பணிக்குழு அல்லது ரீத்தா சேவியர்: 012 918 1620